

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29-02-2024

# சதிகளை வெல்லும் சாதுர்யங்கள் - 2

‘சாதுர்யம் இருந்தால் சாதித்துக் கொள்ளலாம்’ – என்று வழிகாட்டுகிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அவர் தனது கடமையை முதலில் செய்து விட்டு அடுத்தவருக்கு அறிவுரை வழங்கட்டும்.

மெட்ரோ ரயில் திட்டத்துக்கு வாக்குறுதி கொடுத்த நிதியை ஒன்றிய அரசு தரவில்லை. அதற்கான காரணத்தை அவரால் சொல்ல முடியவில்லை. மெட்ரோ ரயில் இரண்டாம் திட்டங்களில் ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு என்பது ஒன்றிய அரசும், மாநில அரசும் 50 : 50 விழுக்காடு பங்கிட்டுத் தர வேண்டும். மெட்ரோ இரண்டாம் கட்டப் பணி என்பது ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும். பா.ஜ.க. அரசு இதற்குப் பணம் ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்து கடிதம் மேல் கடிதம் அனுப்பி விட்டார். அதற்கு இது வரை ஒப்புதல் வரவில்லை. மாநில அரசு செலவு செய்வதற்கான நிதியைத் திரட்ட பன்னாட்டு கடனுதவி பெறுவதற்கும் அனுமதி தரவில்லை. மாநில அரசு இந்த ஆண்டு ரூ.9 ஆயிரம் கோடியை ஒதுக்கி இருக்கிறது. ஒன்றிய நிதி வரவில்லை என்றால் இந்தத் திட்டத்தை முழுமையாக மாநில அரசின் நிதியில் இருந்துதான் செயல்படுத்த வேண்டும். ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடியை இதற்காக ஒதுக்கினால்தான் மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தை செயல்படுத்தி முடிக்க முடியும். நிதித்துறையை கையில் வைத்திருக்கும் நிர்மலா சீதாராமன் இதற்குப் பதில் சொல்லி இருக்க வேண்டும்.

ஜி.எஸ்.டி. வரி இழப்பீடு நிறுத்தப்பட்டதால் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டுக்கு ரூ.20 ஆயிரம் கோடி நிதி இழப்பு ஏற்பட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது பற்றிக் கேட்டால், ‘சட்டத்தில் இடமில்லை’ என்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். ஐந்து ஆண்டுகள் தான் இழப்பீடு தருவதாக சட்டத்தில் இருக்கிறதாம். அந்தச் சட்டத்தை யார் போட்டது? இதே பா.ஜ.க. தான்.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் மாநிலங்கள் பாதிப்பு அடைகின்றன என்பதை உணர்ந்துதானே இழப்பீடு கொடுக்க ஒப்புக் கொண்டீர்கள். அப்படியானால் அந்த இழப்பீட்டை தொடர்ந்து கொடுப்பதுதானே சரியானதாக இருக்கும். ‘சட்டம் இடமளிக்கவில்லை’ என்று சொல்லும் அமைச்சர், அந்தச் சட்டத்தை மாற்றலாமே!

தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுத்தால், 29 பைசா தான் திருப்பித் தரப்படுகிறது என்பது நமது குற்றச்சாட்டு. அது தொடர்பாக அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் நிருபர் கேட்கிறார். புள்ளிவிபரப் புலியான அமைச்சர் தன்னிடம் இருக்கும் கோப்புகளை வைத்து இதனை மறுத்திருக்க வேண்டும். ‘1 ரூபாய் வாங்கிவிட்டு, அதைவிட அதிகமாகத் தருகிறோம்’ என்பதை நிரூபித்துச் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் பொத்தாம் பொதுவாக, ‘தமிழகத்திற்கு அதனிடம் கிடைக்கும் வருவாயை விட அதிகமாகத் தான் கொடுத்திருக்கிறோம்’ என்று பதில் சொல்கிறார். அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்றால் எவ்வளவு? அது அமைச்சருக்குத் தெரியாதா? கேட்டுச் சொல்ல வேண்டியதுதானே?

ஜி.எஸ்.டி. இழப்பீடாக 2017 இல் ரூ.632 கோடியும், 2018 இல் ரூ.3,151 கோடியும், 2019 இல் ரூ.8,922 கோடியும், 2020 இல் ரூ.11,141 கோடியும், 2021இல் ரூ.6,696 கோடியும், 2022இல் ரூ.16,214 கோடியும், 2023 இல் ரூ.3,532 கோடியும் தந்ததாகப் புள்ளி விபரம் சொல்லும் ஒன்றிய அமைச்சர் தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பணம் கொடுத்துள்ளது என்பதை ஏன் சொல்லவில்லை?

**“மாநிலங்களின் நிதி உரிமையை - வலிமையைப் பறிப்பது என்பது அதன் ஆக்ஸிஜனை நிறுத்துவது ஆகும். அதனைத் தான் பா.ஜ.க. அரசு செய்து வருகிறது” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது தானே முழு உண்மை.**

மாநில அரசுகளின் நிதி நிர்வாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது கேரள மாநில அரசு.

அதற்கு தமிழ்நாடு அரசும் முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று மாண்புமிகு பினராயி விஜயனுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம் எழுதி இருந்தார். இதே கோரிக்கையை முன் வைத்து கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவும், கேரள முதலமைச்சர் பினராயி விஜயனும் டெல்லிக்குப் போய் போராட்டமே நடத்தி இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு தரவேண்டிய நிதியை தர மறுப்பதால்தான் கடன் வாங்க வேண்டிய சூழல் மாநில அரசுக்கு இருக்கிறது. ஆனால், மாநிலங்கள் கடன் வாங்குவதில் கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக் கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது ஆகும். மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இந்தப் பிரிவின்படி, மாநிலங்கள் கடன் வாங்க ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்பதே மாநில சுயாட்சிக்கு எதிரானது ஆகும். ‘மாநில சுயாட்சி’ என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பவர் அவர். அவருக்கெல்லாம் அரசியல் மாண்புகள் தெரியாது. புரியாது.

**தொலைக்காட்சிகளிலும், நாளிதழ்களிலும் பேட்டிகளை நிர்மலா சீதாராமன் வாரி வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் தமிழ்நாட்டில் போட்டியிடப் போவதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டு மக்கள் அவருக்குப் புரியும் மொழியில் நிச்சயம் பதில் சொல்வார்கள்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 7 கோடியே 85 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம், தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மணிமண்டபம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம், வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன் கூடிய புதிய சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டாக்டர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தஞ்சை - தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கவிஞர் தமிழ்ஒளி மார்பளவு சிலை!

# தமிழறிஞர்கள் 9 பேர்களுக்கு இலக்கிய மாமணி விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.29-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் 2022, 2023ஆம் ஆண்டுக்கான மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி சிறப்பு நேர்வாக இலக்கிய மாமணி விருதிற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது தமிழறிஞர்களுக்கு அவ்விருதுகளை வழங்கி சிறப்பித்தார். மேலும், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் மார்பளவு சிலையை திறந்து வைத்தார்.

**தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருது வழங்குதல்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி 3.6.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், “இலக்கிய மாமணி” என்ற விருது உருவாக்கப்பட்டு, தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, மரபுத்தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய வகைப்பாட்டில் ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வரிசையில், 2022ஆம் ஆண்டிற்கான இலக்கியமாமணி விருதிற்குத் தெரிவு செய்யப்பட்ட விருதாளர்கள் - கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் அரங்க. இராமலிங்கம், (மரபுத்தமிழ்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொ.மா.கோதண்டம், (ஆய்வுத்தமிழ்), கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் சூர்யகாந்தன் (எ) மா.மருதாச்சலம் (படைப்புத்தமிழ்) ஆகியோருக்கும்;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நேர்வாக தெரிவு செய்யப்பட்ட இலக்கிய மாமணி விருதாளர்கள் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி மணி அர்ஜுனன் (மரபுத்தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த அர.திருவிடம் (ஆய்வுத்தமிழ்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த க. பூரணச்சந்திரன் (படைப்புத்தமிழ்) ஆகியோருக்கும்;

2023-ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட விருதாளர்கள் - கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஞா. மாணிக்கவாசகன் (மரபுத்தமிழ்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் சு.சண்முகசுந்தரம் (ஆய்வுத்தமிழ்), சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் இலக்கியா நடராசன் (எ) ச. நடராசன் (படைப்புத்தமிழ்) ஆகியோருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இலக்கிய மாமணி விருதிற்கான ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை ஆகியவை வழங்கப்பட்டு, பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

**தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் மார்பளவு சிலையை திறந்து வைத்தல்** கவிஞர் தமிழ் ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களால் 19.9.2023 அன்று அறிவித்தவாறு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மொழிப்புலத் துறையில் 7 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் மார்பளவு சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டாக்டர் இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மாவட்டம்

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் 601 வீட்டுமனைப் பட்டாக்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

*நாமக்கல், பிப். 29 -*

*நாமக்கல் மாவட்டம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அத்தனூர் ஸ்ரீ பாலாஜி மஹாலில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு பட்டா வழங்கும் முகாமில், இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், கலந்து கொண்டு ரூ.5 கோடி மதிப்பில் 601 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கி பேசியதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீரிய முயற்சியினால் நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியினால், இராசிபுரம் பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில் ரூ.854 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி உள்ளார். இதன் மூலம் இப்பகுதி மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படும். இதுபோல மக்கள் நலனுக்காக ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்.*

*வீடற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதியினை உறுதி செய்யும் வகையில் வருவாய்த் துறையின் மூலம் தகுதியான பயனாளிகளுக்கு அரசு வழிமுறைகளை பின்பற்றி இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மே 2021 முதல் நாளதுவரை 13,570 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.*

*அந்த வகையில் இன்றைய தினம் ரூ.5 கோடி மதிப்பில் 601 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் கே.பி. ஜெகநாதன், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் (வெண்ணந்தூர்) ஏ.ஆர்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூராட்சி தலைவர் எஸ்.ராஜேஸ், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ. சுமன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் (பொ) த.முத்துராமலிங்கம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வெ.முருகன், இராசிபுரம் வட்டாட்சியர் சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*




தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களது ஆணைக்கிணங்க, விருதுநகர் தெற்கு வடக்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், விருதுநகர் SSK திருமண மண்டபத்தில், தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், பவானி ராஜேந்திரன், குன்னூர் சீனிவாசன், நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், வர்த்தக அணி வனராஜ், சேர்மன் சுப்புராஜ், கே.எம்.விஜயகுமார், தேர்தல் மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து அணிகளும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.